சுந்தரபாண்டியபுரம்

சண்பக விநாயகர் வெண்பாபதிகமும்

இராஜகோபால சுவாமி பதிகமும்

உ

மஹாகணபதி துணை

சுந்தரபாண்டியபுரம்,
சண்பக விநாயகர் வெண்பாப்பதிகமும்,
இராஜகோபால சுவாமி பதிகமும்

இவை

ஷை சுந்தரபாண்டியபுரம்

அ. கி. ப. கோபாலகிருஷ்ணையர்,

அவர்களால்

இயற்றப்பெற்று

கும்பகோணம் தமிழ்ப்பாத்தியாயர்,

தி. வெ. சாமிநாதபிள்ளை யவர்களால்

பார்வையிட்டு

தென்காசி,

...ம் அச்சியந்திரசாலையிற்

...பித்தது.

...917

...பி 500

[விலை அணா 1.

உ

மஹாகணபதி துணை.

சுந்தரபாண்டியபுரம்,

சண்பகவிநாயகர் வெண்பாப்பதிகமும், இராஜகோபால சுவாமி பதிகமும்.

இவை

ஷை சுந்தரபாண்டியபுரம்,

அ. கி. ப கோபாலகிருஷ்ணய்யர்

அவர்களால்

இயற்றப்பெற்று

கும்பகோணம் தமிழுபாத்தியாயர்,

தி. பெ. சாமிநாதபிள்ளை யவர்களால்

பார்வையிட்டு

தென்காசி,

கோமதி விலாசம் அச்சியந்திரசாலையிற்

பதிப்பித்தது.

1917

காப்பி 500

 [விலை அணா 1.



உ

சிறப்புப்பாயிரங்கள்.

கும்பகோணம் தமிழுபாத்தியாயர்.

தி. பெ. சாமிநாதபிள்ளையவர்களால்

இயற்றிய

எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

சித்திர நதிசூழ் சுந்தர பாண்டித்
    தெய்வமாஞ் சண்பகக் களிற்றின்
சுத்தபொற் பாத மலரிற்பா மாலை
    சூட்டினன் பதியதி லுறைவோன்
வைத்தியங் கணிதஞ் சிற்பமாங் லேயம்
    வடமொழி தென்மொழி பயின்றோன்
வித்தக னங்கோ பாலக்ருஷ் ணப்பேர்
    வேதிய குலத்துசற் குணனே.

மகா-ா-ா-ஸ்ரீ

C. M. வேங்கடராமாநுஜலுநாயுடுகோரு. B. A.

தென்காசி, சப்ரிஜிஸ்தாராவர்களாலியற்றிய

நேரிசை வெண்பா.

வெண்பாப் பதிகம் வியன்சுந் தரபாண்டி
சண்பகவி நாயகர்க்குச் சாற்றினன்—பண்பாகப்
பாவணிக ளெல்லாம் பரவக்கோ பாலகிர்ஷ்ணன்
நாவலர்கள் போற்ற நயந்து.

தென்காசி கன்னிமார்தெரு தமிழ்வித்துவான்
ஆ. சங்கரலிங்கம்பிள்ளையவர்களாலியற்றிய
அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

தந்திமுகத் தனிக்கோட்டுச் சண்பகக்க
  ணேசனது தமிழ்வெண் பாப்போல்
எந்தவிடத் தெவர்சொன்ன ரளகைநிகர்
  நிதிமல்கு மெயில்சூழ் சோலை
சுந்தரபாண் டியபுரத்துக் கோபால
  கிருஷ்டிணமால் சுருதி வாக்கை
சிந்தையுறத் துதிக்கிலிஷ்ட சித்தியுண்டா
  மிதன்பெருமை செப்பற் பாற்றே,

புதுவை.

அருணசலக்கவிராயரவர்ளாலியற்றிய
நேரிசை வெண்பா.

விண்ணின்று கீர்த்தி விளைசுந் தரபாண்டி
நண்ணியமர் சண்பகவி நாயகர்க்குக்—கண்ணியமாய்
வெண்பாப் பதிகம் விளம்பினன்கோ பாலகிர்ஷ்ணன்
நண்பா வியல்பொருந்த நன்கு

சிறப்புப்பாயிரங்கண் முற்றுப்பெற்றன.



உ

கணபதிதுணை.

சுந்தரபாண்டியபுரம்

சண்பகவிநாயகர்

வெண்பாப் பதிகம்.

விநாயகர் காப்பு.

நேரிசை வெண்பா.

தாண்டி வலம்வந்து தாதையெதிர்நின்று
வேண்டுங் கனிகொண்ட வித்தகனே—நீண்டபுகழ்
சுந்தர பாண்டிபுரத் தொந்திக் கணபதியே
தந்தருள்வா யுன்கிருபை தான்.

சுப்பிரமணியர் துதி.

கட்டளைக் கலித்துறை.

காராருந் தென்பொதி காசல மேவுங் கடமுனிக்கிப்
பாராருஞ் சங்கத் தமிழுபதேசித்த பன்னிருகை
கூராரும் வேலு மயிலு முடைய குருபரனை
வாராருங் கொங்கைக் குறவள்ளி நாதனைவாழ்த்துதுமே.

சுந்தரேசுரர் துதி.

சுந்தரஞ்சேர் பாண்டிபுரச் சுந்தரே சன்றனர
விந்தப் பதத்தை விரும்பினல்—முந்தைவினைப்
பாசபந்த நீங்கிப் பரமசா யுச்யபதம்
நேசமொடு கொள்வீர் நிசம்.

இராஜகோபாலசுவாமி துதி.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

சித்தர்முனி வரர்புகழுஞ் சித்ரநதிப்
புனல்பாயுந் திரைய கத்தும்
உத்தமவே தியரத்தி யயனத்துங்
குரவையினு முண்டா மூன்று
சத்தமறுச் சுந்தரபாண் டியபுரத்திற்
றண்டம் வில்வாட் சங்க மாழி
அத்தமணிந் தெழுந்தருளு மிராஜகோ
பாலனடி யகத்துள் வைப்பாம்.

திருச்சிற்றம்பலநாதர் துதி.

கொழுந்துவிட்டுத் தருக்களடர் சோலையினும்,
முத்துயிர்த்துக் கோடு சேற்றில்
அழுந்துபழ னத்துயலர்த் தடத்துமுய
ருதகவள மதிக ரிக்க
விழுந்துகுற்ற லத்திருந்து பெருகிவருஞ்
சித்ரநதி மேவுந் தீரத்
தெழுந்தருள்சிற் றம்பலவ னிணையடியை
யிருதயத்து ளிருத்தி வாழ்வாம்.

குலதெய்வம் பராவுதல்.

சட்டநாதசுவாமி துதி.

நேரிசை வெண்பா.

சட்டநா தப்பேர் தயாநிதியே யெம்முடைய
இஷ்டகுல தெய்வமே யீசுரனே—கஷ்டமெலாம்
நீங்கும் படியருள்வாய் நித்தனே சீர்காழி
ஓங்கும் பரனே யுவந்து.

சரஸ்பதி துதி.

நேரிசை வெண்பா.

சங்கரனார் வாழ்சுந் தரபாண்டிச் சண்பகத்
தைங்கரனார் வெ்ண்பா வலங்கரிக்கப்— பங்கயனார்
பத்தினியே பாரதியே பாமகளே நாமகளே
முத்தமிழைத் தந்தருள்வாய் முன்.

ஐயனார் துதி.

கட்டளைக் கலித்துறை.

பாரிய னேர்சுந் தரபாண்டிப் பூங்குளப் பாங்கமர்ந்த
ஆரிய னேயெம் மரிஹர புத்திர னனவனே
சாரிய னேயைய னேசாந்த னேவெண் கரிநடத்தும்
வீரிய னேயென் னிடர்தீர்த்திரட்சிக்க வேண்டினனே

நூல்.

நேரிசை வெண்பா.

தாரணியிற் சீர்சுந் தரபாண் டியபுரத்திற்
பேரணியாய் வீற்றிருக்கும் பிள்ளையார்—ஆபணிந்த
சண்பகக்க ணேசன் சதங்கைச் சிலம்பணிந்த
தண்பதுமத் தாளே சரண். (1)

செந்தா மரைமகள்வாழ் செல்வமொடு கல்விநிறை
சுந்தர பாண்டி தனிற் றேத்திரஞ்செய்—கந்தனை
தம்பியெதிர் கான்வந்த சண்பகக்கணேசனடி [னுந்
நம்பினவர்க் குண்டே நலம். (2)

சஞ்சிதத்தைப் போக்கத் தகுஞ்சுந் தரபாண்டி
விஞ்சு புரந்தனிலே வீற்றிருக்கும்—அஞ்சுகரச்
சண்பகக்க ணேசனே தந்திமுக னேநான்கு
திண்புயனே நீகிருபை செய். (3)

நாற்றிசையு மேதுதிக்கு நற்சுந் தரபாண்டி
வீற்றிருக்குஞ் சண்பகவி நாயகனைப்—போற்றி
இஷ்ட சுக லாபப்பெற் றீடேற லாநமது [செய்தால்
கஷ்டமெலாம் போமே கரைந்து. (4)

சித்தியெலா முண்டாக்குந் தெள்ளறிவை யூட்டு
பத்தியொடு நின்று பணிகுவாய்-சித்தமே[விக்கும்
விண்படர்ந்த கீர்த்தி மிகுஞ்சுந் தரபாண்டிச்
சண்பகக்க ணேசன்மலர்த் தாள். (5)

சந்தங் குணங்கல்வி சம்பத்தெ லாமுதவும்
நிந்தையிலாச் சண்பகக்க ணேசனடி—சுந்தர
பாண்டியபு ரந்தனிலே பார்த்துப்பணிந்தோர்க்கு
நீண்டபவம் போமே நிசம். (6)

மூலாதா ரத்தின் முளைத்த முழுமுதலே
சீலாமெஞ் ஞானச் சிவக்கொழுந்தே—மேலான
தாயகத்தார் சேர்சுந் தரபாண்டிச் சண்பகவி
நாயகனே தாராய் நலம். (7)

துரியாதீ தங்கடந்து தோன்றுசுயஞ் சோதி
பிரியாத வல்லபையாட் பேறே—சரியான
தாசர் நிறைசுந் தரபாண்டிச் சண்பகக்க
ணேசனடி நெஞ்சே நினை. (8)

வேத னரியரனும் விண்ணவரு மேத்துதிக்கும்
நாதனே சண்பகவி நாயகனே—நீதனே
சாற்றுவேனின்புகழைச்சந்ததமுன்பொன்னடியை
எற்றுவே னுள்வா யெனை. (9)

பண்பூத்த சுந்தர பாண்டியபு ரத்திலொளிர்
விண்பூத்த சண்பகவி நாயகனே—கண்பூத்த
பாலசிவ பாலவுமை பாலகோ பாலனெனும்
பாலனெனைப் பாதுகார்ப் பாய். (10)

மறவேன் மனத்துண் மறந்திந்த மண்ணிற்
பிறவேன் கருணைப் பிழம்பே—இறவா
அருகனே யானைமுகத் தையனே கோபாலன்
மருகனே நின்றுண் மலர். (11)

சண்பக விநாயகர் வெண்பாப்பதிகம்

முற்றுப்பெற்றது.

முப்பிடாரியம்மன் துதி.

நேரிசை வெண்பா.

பொங்கலிட்டுத் தொங்கலிட்டுப் பூசையிட்டுப் போற்றி
சிங்கத்தி லேறுந் திரிசூலி—இங்கிதனை [செய்வோஞ்
நப்பிமனம் வைத்தருள்வா யோங்காரி கங்காளி
முப்பிடா ரித்தாயே முன்.

ஆடுடனே கோழிபலி யாய்க்கொடுத்து பூஜைபல
போடுவே னண்டபரி பூரணியே—கூடுமென்றன்
சத்துருவெ லாக்தொலையச் சாடுமுப்பி டாரியே
பத்திரகா ளித்தாயே பார்த்து.

ஸ்ரீ

சாத்துக்கவிகள்.

கும்பகோணம் தமிழுபாத்தியாயர்

தி. வெ. சாமிநாதபிள்ளையவர்களாலியற்றிய

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

புலவரெனுஞ் சுரும்பினங்கட் பொருணறவ
மினிதருந்திப் பூரிப் போடு
பலவிடத்து மிசைபாடச் சுரர்பணியி
ராஜகோ பால ஸ்வாமிக்
குலவுதுணைப் பதமலர்க்குத் தமிழ்ப்பதிகம்
விதிமுறையிற் குயிற்றி னானல்
நிலவளசுந் தரபாண்டிக் கோபால
கிருஷ்ணகவி நிபுணன் மாதோ.

தென்காசி கன்னிமார்தெரு தமிழ் வித்வான்,

ஆ. சங்கரலிங்கம்பிள்ளையவர்களாலியற்றிய

கட்டளைக் கலித்துறை.

சேலேந்து பூந்தடச் சுந்தர பாண்டித் திருநகரில்
பாலேந்து மாழியி ராஜகோ பாலற் பதிகமியன்
மேலேந்து மாறு விளம்பினன் யாப்பு விதியுணர்ந்தோன்
நூலேந்து கேள்வியன் கோபால கிர்ஷ்ணமுன் னூல
[வனே.



ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

சுந்தரபாண்டியபுரம்

இராஜகோபாலசுவாமிபதிகம்

நம்மாழ்வார் காப்பு.

நேரிசை வெண்பா.

ஈசனெனப் போற்று மிராஜகோ பாலற்கு
பேசும் பதிகப் பெருந்துணையாம்—நேசகுரு
கூரன் றமிழின்மறை யோதினு னங்காரி
மாரன் பததா மரை.

மாறன்— மாரனென, எதுகைபற்றிவந்தது.

ஸ்ரீராமஜெயம்.

நூல்.

பதினான்கு சீர்க்கழிநெடிலடி

ஆசிரிய விருத்தம்.

மாமேவு நவரத்ந மணிமுடியு மெழினுதலு
மதிவதன விம்ப வழகும்
மலர்விழிக் கருணையொடு மந்தஹா சப்பவள
வாயு மலை நாணு புயமும்
பூமேவு செங்கமலை வாழகன் மார்புமறைப்
போதனைத் தருநா பியும்
பொற்சரிகை வஸ்த்ரமணி யிடையுமுனி
வரர்சுரர் போற்றுதிரு வடிக்க மலமுங்
காமேவு கரங்களிற் பஞ்சாயு தங்களுங்
காணவந் தருள்புரி குவாய்
கண்ணனே நீலமணி வண்ணனே நன்னயக்
கருணா காக்க டவுளே
தேமேவு பலர்த்தடங் குலவுசுந் தரபாண்டி
க்ஷேத்திரந் தனில மர்ந்த
தேவர்துதி சீலனே கோபியர்கள் லோலனே
ஸ்ரீராஜ கோபா லனே. (1)

சங்குசக் கரகதா கட்ககோ தண்டமாந்
தாங்குபஞ் சாயு தாதின்
தாசர்களி னேசனே சாரங்க ராஜனே
தமியனேன் பவநா சனே
மங்களகல் யாணகுண நாராய ணாவெனோ
வாழ்விப்ப துன்கட மைகாண்
வரதனே காளிங்க பாதனே வருசகட
மாயவுதைத் திட்ட பானே
கங்கைதரு பாதனே யிங்கிதவி நோதனே
கௌஸ்துப மணிநா தனே
கரியாதி மூலமென வந்துதந் திடுமபய
கையனே யெனதை யனே
செங்கமல மீதனந் தங்குசுந் தரபாண்டி
க்ஷேத்திரந் தனில மர்ந்த
தேவர்து தி சீலனே கோபியர்கள் லோலனே
ஸ்ரீராஜ கோபா லனே. (2)

மால்கொண்ட வேல்விழிப் பாவையர்கண் மோக
மயக்கா தளிக்கு மமுதே
வையக மெலாமுண்ட வாயனே யாயனே
மாயனே திருநே யனே
ஆல்கொண்ட பத்திரத் தருந்துயி லமர்ந்தருள்
ஆண்டவா மணிபூண் டவா
ஆழியா லாதவன் மறைந்திடச் செய்தவா
ஆழியிற் பள்ளி கொண்டோய்

சூல்கொண்ட பணிலமது செங்கமல மலர்மீது
துயில்கொண்ட பழன மெல்லாந்
துள்ளியெழு சினவாளை பூகமடல் பீறவரு
துளிநறவு வழிகா லொடு
சேல்கொண்ட சித்ரநதி பெருகுசுந் தரபாண்டி
க்ஷேத்திரந் தனில மர்ந்த
தேவர்துதி சீலனே கோபியர்கள் லோலனே
ஸ்ரீராஜ கோபா லனே. (3)

நார்பூத்த பக்தியொடு நின்பூஜை செய்திலேன்
நல்லவ ரினஞ்சேர்ந் திலேன்
நானென தெனச்சொல்லு மாணவம் போக்கி
நயந்துதரு மஞ்செய் திலேன் [லேன்
கார்பூத்த காமக் கடலைக் கடந்திலேன்
கயவருற வைத்தாண் டிலேன்
கசடனேன் மூடனேன் கொடியனே னாயினுங்
கடையனெனை யாட்கொள் ளுவாய்
வார்பூத்த தனருக்கு மணிசத்ய பாமையிரு
மடவார்கள் மணவா ளனே
வரதசுந் தரவிபுத மாயாவ தாரனே
மாதவர்க ளோது முதலே
சீர்பூத்த நிலவளந் துலங்குசுந் தரபாண்டி
க்ஷேத்திரந் தனில மர்ந்த
தேவர்துதி சீலனே கோபியர்கள் லோலனே
ஸ்ரீராஜ கோபா லனே. (4)

சொல்லாரு மாரணந் தேடுபிர தாபனே
சோதிமா கதரூ பனே
துளபமணி மார்பனே திகழ்பதும நாபனே
சுந்தரா கருணை வாழ்வே
மல்லாரு மசுரகுல காலனே கடன்மீது
வடிக்கணை விடுத்த நெடியோய்
மாபலி யிடத்துமண் மூவடியி ரக்கவரு
வாமனா வாசு தேவா
பல்லாரும் வீரநர சிங்கமாய்த் தோன்றிசிறு
பாலனைப் பரது கார்த்தாய்
பாடுபடு மேழைமுகம் பார்த்துதவி செய்வ
பாரமோ பரந்தா மனே [தொரு
செல்லாரு நற்பொழின் மல்குசுந் தரபாண்டி
க்ஷேத்திரந் தனில மர்ந்த
தேவர்துதி சீலனே கோபியர்கள் லோலனே
ஸ்ரீராஜ கோபா லனே. (5)

ஒருமானுக் காவனம் வருமானை யெய்தவா
உந்திபூத் தயனை யீன்றோய்
உலகெலா மோரடியி னுலளந் தோங்கிய
உக்ரதிரி விக்கிர மனே
அருமாத வத்தர்சுரர் பூசுரர்க ளாதியோர்
அநுதினம் பரவும் ஹரியே
ஆரண நீண்டபரி பூரண காரண
அவனிசெங் கடலை யென்னும்

இருமாதி னேடுவை குந்தத் தெழுந்தருளும்
எந்தையே நந்த னந்தா
இடர்புரியு மெனதுவி ரோதிகளை மாற்றி
இரக்ஷிக்க விதுசம யமே
திருமாது கலைமாது நிலவுசுந் தரபாண்டி
க்ஷேத்திரந் தனில மர்ந்த
தேவர்துதி சீலனே கோபியர்கள் லோலனே
ஸ்ரீராஜ கோபா லனே. (6)

எத்திக்கு மேபோற்று மீனமாய்க் கமடமா
யாளியா யேன மான
ஈசனே குறளாகி மாபலி யடக்கவரும்
ஏந்தலே பரசி ராமா
முத்திக்கு வித்தான வத்தனே சீதையை
மோசமாய்க் கொண்டு போன
மூர்க்கதச கண்டனுயிர் கண்டகோ தண்ட
மூர்த்தியே பலபத் திரா [குரு
அத்திக்கு மேவரந் தந்தருண் முகுந்தனே
அறமோங்க கற்கி யாவாய்
அவனியிற் பாரத முடிக்கவரு கண்ணனே
அகலவெனை விடனீ தியோ
தித்திக்கு மதுவயற் பரவுசுந் தரபாண்டி
க்ஷேத்திரந் தனில மர்ந்த
தேவர்துதி சீலனே கோபியர்கள் லோலனே
ஸ்ரீராஜ கோபா லனே. (7)

மணியேறு காளிங்கன் முடியேறி யாடிய
மாதவா மதுசூதனா
மனதிலுனை தியானிக்கு மார்க்கமறி யேன்
வாழ்த்தித் துதிக்க வறியேன் [புகழை
பணியேறு சிரமோடு நின்பாத பூஜைசெய்
பான்மையோ சிறிது மறியேன்
பாலனம் பருப்புநெய் வயிறுரா வுண்டிந்த
பாழுடல் வளர்க்க லானேன்
அணியேறு தோளனே வனமேவு தாளனே
அலமேலு மணவாளனே
அறியாத மூடனெனை யாதரித் தோர்நெறி
அருளாதிருப்ப தழகோ
திணியேறு மாடகூடஞ்செறிசுந் தரபாண்டி
க்ஷேத்திரந் தனில மர்ந்த
தேவர்துதி சீலனே கோபியர்கள் லோலனே
ஸ்ரீராஜ கோபா லனே. (8)

நன்காசி ரவிமதிப் பிரபைகண் முடியிட்டு
நற்சுட்டி நுதலி லிட்டு
நவரத்ந கேயூர மிட்டுநின் னிமாலை
நடுவிட்டு கடக மிட்டு
பொன்காசி மாலையு மதாணிகளு மார்பிட்டு
பூங்கழற் சதங்கை யிட்டு
பொட்டிட்டு மையிட்டு தாலாட்டி யேசோதை
பூரிக்கும் ஞான வடிவே

பன்காசி நகரைவிட வைதிக புண்ணியம்
வளருமித் தலமென் னவே
மாநிலமெலாம் புகழ்ந் தேத்திட வகத்தியன்
பலயபலைச் சார்பி லுற்ற
தென்காசி குணதிசையின் மருவுசுந் தரபாண்டி
க்ஷேத்திரந் தனில மர்ந்த
தேவர்துதி சீலனே கோபியர்கள் லோலனே
ஸ்ரீராஜ கோபா லனே. (9)

அன்னைதந் தயர்மனைவி சேய்பந்து மித்திரர்கள்
அப்பலக் கூட்ட மென்றும்
அகப்பணி நிலந்தனஞ் சர்வசம் பத்தெலாம்
ஆகாய மின்ன லென்றும்
துன்னுமிவ் வூத்தைநிறை சடலநீர்க் குமிழிபோற்
றோன்றியுட னழியு மென்றுஞ்
சொல்லுமறை யிதிகாச வேதாந்த சித்தாந்த
தொன்னூல் துதிக்கு மிறையே
கன்னபுரம் வேங்கடங் குடந்தைபுல்லாணிநறை
கண்டியூ ரங்க மெய்யக்
கச்சி பாடக மதுரை நாகைஸ்ரீ வைகுந்த
காழியுங் காணவருள்வாய்
சென்னல்முத் தீனும்வயன் மேவுசுந் தரபாண்டி
க்ஷேத்திரந் தனில மர்ந்த
தேவர்துதி சீலனே கோபியர்கள் லோலனே
ஸ்ரீராஜ கோபா லனே. (10)

அரையேந்து பீதாம்ப ரத்தனே நித்தனே
அமலனே நிமல னேயென்
ஐயனே நின்பாத மலரைமற வாமலே
அநுதினந் துதிக்க வேண்டுந்
தரையேந்து தண்டமிழ்க் கல்வியுஞ் செல்வமுஞ்
சார்ந்தசுக வாழ்வு வேண்டுஞ்
சரீரதிட தத்துவஞ் சத்தியஞ் சற்குணந்
தவறாதி ருக்க வேண்டும்
வரையேந்து கையனே நித்தியா நித்திய
வஸ்துவி வேகம் வேண்டும்
மைந்தகோ பாலனேற் கிவையெலாந் தந்துன
மலரடிக் காளாக் குவாய் [து
திரையேந்து நீர்வள மிகுந்தசுந் தரபாண்டி
க்ஷேத்திரந் தனில மர்ந்த
தேவர்துதி சீலனே கோபியர்கள் லோலனே
ஸ்ரீராஜ கோபா லனே. (11)

இராஜகோபாலசுவாமி பதிகம்
முற்றுப்பெற்றது.

வாழி—விருத்தம்

வாழ்க தேவர்கள் வாழ்கவுல கெல்லாம்
வாழ்க நான்மறை வாழ்க மறையவர்
வாழ்க மதிகதிர் வாழ்க மழை முகில்
வாழ்க நஞ்சக்கர வர்த்தியும் வாழ்கவே.



Edited & Publlshed

BY

A. K. P. Gopalakrishnaiyer,

SUNDHARAPANDIAPURAM.

Tonkasi Taluq.